மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.99/2019

வாக்குமூலம். வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலினாள் | ஜாதி | |
| க/பெ. | ஆரோக்கியம் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 70 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 28.06.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் வாதியின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். அதிலுள்ள கைரேகை என்னுடைது தான். தாவா சொத்து சம்மந்தமான செட்டில்மெண்ட் "அ" பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து சம்மந்தப்பட்ட UDR பட்டா அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா புலஎண் உட்பிரிவு செய்யப்பட்டது தொடர்பான கிராம நிர்வாக அலுவலர் சான்று அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1975-லிருந்து 2018 வரையிலான காலக்கட்டத்திற்குரிய வில்லங்கச் சான்று அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இந்த வழக்கில் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.